Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.384/2025

Dated 09-04-2026
Deposition of witness for : PW 7

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பவுல்கிளிண்டன் | வயது | : | 30 |
| தந்தை பெயர் | : | சூசைஅருள் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | நாவலர் நகர். விளார்ரோடு | தொழில் | : | டைல்ஸ் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1 to 5 produced. Accused 6 to 13 present**

**Ld. D. Counsel Present**

சாட்சியை தஞ்சாவூர் தாலுக்கா காவல்நிலைய மு.நி.கா. 1348 பிரகாஸ்குமார் அடையாளம் காட்டினார்.

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். அ.சா.1 முதல் 6 ஆகியோர்களை எனக்கு தெரியும்.

2) இறந்துபோன சசிக்குமாரை எனக்கு தெரியும். அவர் என்னுடன் வேலைக்கு வந்துள்ளார்.

3) 8.9.2025 அன்று இரவு 11 மணியளவில் டைல்ஸ் வேலையை முடித்துவிட்டு நானும் விக்னேஷ் இருவரும் நியு பாத்திமா நகர் 5 வது தெரு வழியாக வந்துகொண்டிருந்தோம். அப்போது ஹரிஹரன் வீட்டு வாசலில் சக்தி, கோகுல், ராஜா என்கிற சஞ்சய், பிரபா, சபரி ஆகியோர் பேசிக்கொண்டிருந்தார்கள். ஹரிஹரனும் உடன் இருந்தார்.

4) அப்போது அவர்களுக்குள் பேசிக்கொண்டிருந்தார்கள். சசியை பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள். சசி நம்மளிடம் பிரச்சினைக்கு வந்துகொண்டிருக்கிறான் அவனை வளரவிடக்கூடாது அவனை கொலை செய்து விடவேண்டும் என்று பேசிக்கொண்டிருந்தார்கள். என்னுடன் வந்த விக்னேஷ் என்னிடம் ஏண்டா இப்படி பேசிக்கொண்டிருக்கிறார்கள் என்னிடம் கேட்டான். நான்அவனிடம் அவர்கள் குடிபோதையில் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நீ இதல்லாம் காதுல வாங்காதே வாடா என்று சொன்னேன்.

5) பிறகு நாங்கள் இருவரும் வீட்டிற்கு சென்றுவிட்டோம். மறுநாள் காலை 11.30 மணியளவில் கலைஞர் நகரில் ஒரு பையனை வெட்டி கொன்றுவிட்டார்கள் என்று போன் வந்தது. நான் விக்னேஷ்க்கு போன் செய்து இருவரும் கலைஞர் நகர் 1வது தெருவிற்கு சென்றோம். அங்கு சூர்யா, பிரதிப்குமார் ஆகியோர் சசிக்குமாரின் உடல் அருகே அழுதுக்கொண்டிருந்தார்கள். நான் என்ன என்று கேட்டபோது சசியை வெட்டி கொன்னுவிட்டதாக சொன்னான். யார்ரா என்று கேட்டதற்கு பிரபா, சக்தி, கோகுல், ராஜா என்கிற சஞ்சய், சபரி ஆகியோர் வெட்டிவிடடு ஓடிவிட்டதாக சொன்னான். நான்

சூர்யாவிடம் முதல் நாள் நான் கேட்ட விபரத்தை சொன்னேன். அவனிடம் போதையில் பேசிகொண்டிருப்பதாக நினைத்தேன் என்று அவனிடம் சொன்னேன்.

6) பிறகு போலிஸ் வந்து 108 ஆம்புலன்ஸ் மூலமாக எடுத்து சென்றுவிட்டார்கள்.

7) போலிசார் விசாரணையில் முதல் நாள் இரவே எனக்கு தெரியும்,, அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள் என்று விபரத்தை சொன்னேன்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

12 வது எதிரி தரப்பில் வழக்கறிஞர் குறுக்கு விசாரணை செய்ய தயாராக உள்ளார். மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய மனு தாக்கல் செய்ய இருப்பதாக தெரிவிக்கப்பட்டது. அதனால் மற்ற எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை செய்து முடித்த பிறகு 12 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய உத்தரவிடப்பட்டது)

குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.09 19:11:48 +0530